<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 148/2024 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பெரியசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.03.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் உடுமலைப்பேட்டை சங்கர் நகரில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வந்தேன். தற்போது வீட்டோடு இருந்து வருகிறேன். மாதம் தெரியவில்லை. 2024 ம் வருடம் 1 ம் தேதியன்று நான் ஒட்டன்சத்திரம் மருத்துவமனைக்கு சென்றோம். நானும் என் மனைவி இருவர் தான் இருக்கிறோம் மருத் சென்று 2 ம்தேதி வந்து பார்த்த போது பீரோ உடைக்கப்பட்டிருந்தது. பீரோவில் இருநத துணிகள் கலைத்து போடப்பட்டிருந்தது. உடனே நான் 100 க் குபோன் செய்தேன். பீரோவில் எதுவும் காணாமல் போக வில்லை. நான் அதில் 1000,2000 வைத்திருந்தேன். அது மட்டும் காணவில்லை. என்னிடம் காட்டப்படும புகாரில் உள் ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. புகார் கொடுத்தது பின்னிட்டு போலிசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். அதன் பிறகு இது சம்பந்தப்பட்ட குற்றவாளியை பிடித்து விட்டதாக கூறினார்கள். எனது வயது 87 ஆகிறது.

1,3,4 ம் <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மருத்துவமனைக்கு போனதற்கு ஆவணம் தாக்கல் செய்திர்களா

என்றால் அங்கே இருக்கிறது போலிசாரிடம் தாக்கல் செயயவில்லை. என்ன வகையான பீரோ என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். 100 க்கு போன் செய்தது பின்னிட்டு போலிசார் வந்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். படம் வரைந்தார்களா என்றால் ஆமாம். புகார் காலதாமதமாக 18 நாள் கழித்து கொடுத்துள்ளிர்கள் என்றால் ஆமாம். காலதாமதம் பற்றி விசாரணையில் சொல்லவில்லை என்றால் இல்லை.

2. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பணம காணாமல் போன பணத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பணம் காணாமல் போன விவரத்தை புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பூட்டு பற்றி ய விவரம் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. வயசானவர்கள் வீட்டை பூட்டி விட்டு செல்லும் போது காவல் நிலையத்தில் சொல்லிவிட்டு செல்லலாம் என்பது தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. பக்கத்து வீட்டில் வசிக்கும் பாலசுப்பிரமணி மற்றும் விஜி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியாது நாங்கள் வந்து 6 மாதம் தான் ஆகிறது.

3. போலிசார் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழககு என்றால் சரியல்ல. புகாருக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் போலிசார் விசாரிக்கவில்லை என்றாலும சம்பவ தினத்தன்று விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

2 ம் <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார் கொடுக்கும் போது வீட்டின் சாவியை கொடுத்திர்களா என்றால் இல்லை. பீரோ சாவியை கொடுத்திர்களா என்றால் இல்லை. வீட்டின் மற்றும் பீரோ சாவியை போலிசார் கேட்டு வாங்கவில்லை என்றால் இல்லை. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. போலிசார் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் சாவியை அளித்திருப்பிர்கள் என்றால் சரியல்ல. புகாரில் குல தெய்வ கோவிலுகசு சென்றதாக சொல்லியுள்ள நிலையில் நீதிமன்றத்தில் மருத்துவமனை சென்றதாக முரண்பட்டு சொல்லியுள்ளிர்கள் என்றால் கோவில் சென்று மருத்துவமனை சென்று வந்தோம். புகாரில் பணம் காணாமல் போனதாக சொல்லாமல் தற்போது சொல்லியுளளிர்கள் என்றால் பணம் காணாமல் போனால் போகட்டும் என்னால் அலைய முடியாது என்று விட்டுவிட்டேன்.

மேற்படி குறுக்கு விசாரணை தழுவிக் கொள்வதாக தெரிவித்தார்.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.